பிப்ரவரி 5, 2024

## தமிழ் சினிமா - 2024-ல் வாய்ப்புகள் (Opportunities) மற்றும் சவால்கள் (Challenges) பற்றிய ஒரு குறிப்பு

தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்.

தமிழ் சினிமா 2023-ல் எப்படி பயணித்தது? 2024ல் எப்படி பயணிக்க இருக்கிறது? இதில் இருக்கும் வாய்ப்புகள் என்ன, சவால்கள் என்னென்ன என்பதை பற்றி சில கருத்துக்களை இந்த கடிதத்தின் மூலம் தங்களிடம் பகிர்ந்துக் கொள்ள விழைகிறோம்.

2023-ல் 258 நேரடி தமிழ் திரைப்படங்கள் வெளியாகின. அவற்றில் 192 திரைப்படங்கள், அதாவது 75% படங்கள் குறைந்த பட்ஜெட்டில் (ரூபாய் 5 கோடி பட்ஜெட்டுக்குள்) எடுக்கப்பட்டவை. நடுத்தர பட்ஜெட்டில் 47 திரைப்படங்களும், அதிக பொருட்செலவில், பெரிய பட்ஜெட்டில் 19 திரைப்படங்களும் வெளியாகின.

அதிக பொருட்செலவில் பெரிய பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படங்கள் அநேகம் வணிக ரீதியில் பெரிய வெற்றியடைந்தன. அதே போல நடுத்தர பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படங்களில் 20% மேற்பட்ட படங்கள் வணிக ரீதியில் வெற்றியடைந்தன.

ஆனால், குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட 192 திரைப்படங்களில் ஆறு திரைப்படங்கள் மட்டுமே திரையரங்கிலும், வணிக ரீதியிலும் வெற்றி பெற்றன. அதாவது, 3% படங்கள் மட்டுமே.

குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட 15-க்கும் மேற்பட்ட படங்கள் விமர்சன ரீதியில் பாராட்டுகள் பெற்று இருப்பினும், வணிக ரீதியில் அப்படங்கள் பெரிய வெற்றியை சுவைக்கவில்லை. ஆக மொத்தமாக, 21 குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள் (10% படங்கள்) வணிக ரீதியில் வெற்றி மற்றும் விமர்சன ரீதியில் பாராட்டுகள் என்ற நிலையை அடைந்தன. குறைந்த பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்டு வெளியான மீதம் 90%

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION CHENNAI 600 006

திரைப்படங்களுக்கு விமர்சன ரீதியிலும் வணிக ரீதியிலும் வெற்றி கிடைக்கவில்லை என்பது நமக்கு கவலை தருகிறது.

(தனிப்பட்ட கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து திரைப்படங்களின் பெயர்கள் மேலே தவிர்க்கப்பட்டுள்ளது.)

குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட 90% திரைப்படங்கள் எந்தவித அங்கீகாரமும் கிடைக்காமல் போட்ட முதலீட்டையும் தயாரிப்பாளர்கள் எடுக்க முடியாமல் போகும் நிலை 2024-ல் மாற வேண்டும். அதற்கு, தயாரிப்பாளர்கள் அனைவரும் தமிழ் சினிமாவில் தற்போதய நிகழ்வுகளை கருத்தில் கொண்டு திரைப்படங்களை தயாரிக்க வேண்டும் என்பது அவசியம்.

**<u>திரையரங்குகளில் பார்வையாளர்கள் ஆதரவு</u>**

2023-ல் குறைந்த பட்ஜெட்டில் நல்ல கதையம்சத்துடன் எடுக்கப்பட்ட சில படங்கள் மட்டுமே திரையரங்குகளில் பார்வையாளர்களின் ஆதரவை பெற்றது. தற்போது திரையரங்கில் பார்வையாளர்கள் எவ்வாறான படங்களை ஆதரிக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

ஒரு குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட திரைப்படம் பெரிய அளவில் அனைவராலும் பெரிதாக பேசப்பட்டால் தவிர அத்திரைப்படங்களை திரையரங்கில் சென்று பார்ப்பதற்க்கு பார்வையாளர்கள் இன்று தயாராக இல்லை. அத்திரைப்படங்கள் OTT-ல் வெளியாகும் போது பார்த்துக் கொள்ளலாம் எனும் மனநிலைதான் மக்கள் மத்தியில் உள்ளது.

*'போர் தொழில், டாடா, குட் நைட், இருகப்பற்று, பார்க்கிங், ஜோ'* - போன்ற குறைந்த பட்ஜெட்டில் வெளியான படங்களுக்கு திரையரங்குகளில் ரசிகர்கள் ஆதரவு கொடுத்ததற்கான காரணம், அத்திரைப்படங்களின் கதையம்சமே. அப்படி ஒரு நல்ல கதையம்சத்துடன் நம் திரைப்படங்களும் இருக்கும்பொழுது பார்வையாளர்கள் கண்டிப்பாக நமது படங்களுக்கு ஆதரவு தருவார்கள். ஆனால், கதையம்சம் விமர்சகர்களையும் பார்வையாளர்களையும் கவரவில்லையென்றால், எவ்வித அங்கீகாரமும் இல்லாமல் ஒரு திரைப்படம் போவதற்கு வாய்ப்புகள் அதிகம். எனவே, இதை கவனத்தில் கொண்டு நல்ல கதையம்சம் உள்ள திரைப்படங்களை நாம் தயாரிக்கும்போது திரையரங்களில் பார்வையாளர்கள் நம் படங்களை பார்த்து ஆதரவு தர வாய்ப்புகள் அதிகம். சமீபத்தில் குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்டு வெளிவந்த *'ப்ளூ ஸ்டார்'* திரைப்படம் அதற்கு ஒரு உதாரணம்.

**<u>OTT நிறுவனங்களின் திரைப்படங்கள் வாங்கும் திட்டம்</u>**

தற்போது இந்தியாவில் Amazon Prime, Netflix, Sony Liv, Aha போன்ற standalone OTT நிறுவனங்களாக இருக்கின்றன. இவை தவிர Satellite சேனல் நிறுவனங்களின் ஒரு அங்கமாக Hotstar, Zee 5 மற்றும் Sun Nxt

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION
CHENNAI
600 006

இருக்கின்றன. Standalone OTT நிறுவனங்கள் திரைப்படங்களை வாங்கும் உத்தி வேறு, மீதம் உள்ள நிறுவனங்களின் உத்தி வேறு.

Zee TV, Zee 5, Sony TV, Sony Liv நிறுவனங்களின் merger (இணைப்பு) கடந்த இரண்டு வருடங்களாக எதிர்பார்ப்பில் இருந்து, அதன் மூலம் ஒரு பெரிய ஊடக நிறுவனம் இந்தியாவில் வரப்போகிற வாய்ப்பு இருந்தது. ஆனால், சமீபத்தில் அந்த இணைப்புத் திட்டம் கைவிடப்பட்டது. எனவே, இரண்டு நிறுவனங்களும் பொருளாதார ரீதியில் சில சவால்களை சந்தித்து வருகின்றன. அதிலிருந்து அந்நிறுவனங்கள் வெளிவந்து மீண்டும் satellite மற்றும் OTT உரிமைகளை வாங்கும் சூழ்நிலைக்கு வர சிறிது காலம் ஆகலாம். மொத்தத்தில், இரண்டு OTT நிறுவனங்களும் (Sony Liv, Zee 5); ஒரு Satellite Channel-ம் (Zee TV) தங்களது ஆதரவு கரங்களை 2024-ல் தமிழ் சினிமாவிற்கு தருவதற்கான வாய்ப்புகள் குறைவு.

இந்நிலையில் தமிழ் சினிமா Amazon Prime, Netflix, Aha மற்றும் Hotstar-ஐ மட்டுமே OTT உரிமைகளை வாங்குவதற்கு நம்பியுள்ளது. இதில் Hotstar மற்றும் Star TV (Vijay TV-யும் சேர்த்து) நிறுவனங்களை Reliance Jio வெகு விரைவில் வாங்குவதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி ஒரு merger (இணைப்பு) நடந்தால் மீண்டும் Hotstar மற்றும் Vijay TV நிறுவனங்கள் திரைப்படங்களை வாங்குவதற்கு சிறிது காலம் எடுக்கலாம். அதுவரை, அவர்கள் சிறு பட்ஜெட்டில் (acquiring price) தேர்ந்தெடுத்த சில படங்களை மட்டுமே வாங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

ஆக, OTT உரிமைகளை விற்க தற்போது நம்மிடம் Netflix, Amazon Prime, Aha நிறுவனங்கள் மட்டுமே உள்ளன. இதில் Netflix, 2024 வருடத்தில் அவர்கள் வெளியிட திட்டமிட்ட படங்களை ஏற்கனவே வாங்கி விட்டனர். அதனால், புதிதாக 2024-ல் வெளியாக உள்ள திரைப்படங்களை அவர்கள் வாங்குவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண். 2025-ல் வெளியாக உள்ள நமது படங்களை அவர்களிடம் pitch செய்ய வாய்ப்பு உள்ளது.

Amazon Prime பொருத்தவரை Netflix-யை போலவே அவர்களும் 2024-ல் அவர்கள் வெளியிட விரும்பும் திரைப்படங்களை ஏற்கனவே வாங்கிவிட்டனர். ஆனாலும், அவர்கள் Prime Video Direct (PVD) model மூலம் நிறைய திரைப்படங்களுக்கு ஆதரவு தருகிறார்கள். அதில் குறிப்பிட்ட சில முக்கிய நடிகர்களின் படங்களுக்கு ஒரு minimum guarantee தொகையும் கொடுத்து அதற்கு பிறகு revenue share முறையில் (ஒரு மணி நேரம் திரைப்படம் பார்த்தால் royalty ஆக நான்கு ரூபாய்) தொகை தருகிறார்கள். மீதப்படங்களுக்கு PVD முறையில் revenue share மட்டும் தருகிறார்கள்.

2023-ல் வெளியான 258 திரைப்படங்களில் 116 திரைப்படங்கள் மட்டுமே OTT-ல் வெளியாகியிருக்கின்றன. அவற்றில் 54 திரைப்படங்கள் Amazon Prime-ல் தான் வெளியாகி இருக்கிறது. இதில் பத்திலிருந்து பதினைந்து திரைப்படங்கள் அவர்கள் OTT உரிமைக்காக பணம் கொடுத்து வாங்கியவை.

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION * CHENNAI 600 006

மீதம் கிட்டதட்ட 40 திரைப்படங்கள் revenue share முறையில் வெளியானவை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Aha OTT நிறுவனம் திரைப்படங்களை வாங்குவதை குறைத்துக் கொண்டு ஓரிண்டு திரைப்படங்களை தவிர மீதமுள்ள படங்களை Amazon Prime போலவே revenue share முறையில் வெளியிட ஆரம்பித்து உள்ளது.

மொத்தமாக, OTT உரிமைகளை பொருத்தவரை பெரிய திரைப்படங்களை பெரிய விலை கொடுத்து வாங்க தயாராக உள்ள OTT நிறுவனங்கள் சிறு மற்றும் மீடியம் பட்ஜெட் திரைப்படங்களை revenue share முறையில், அதுவும் குறிப்பிட்ட சில படங்களை மட்டுமே வெளியிட தயாராக உள்ளனர். மீதம் திரைப்படங்களை அவர்கள் வெளியிட விரும்பவில்லை. அதனாலேயே 2023-ல் வெளியான 258 திரைப்படங்களில் 114 திரைப்படங்கள் மட்டுமே OTT-ல் வெளியாகி உள்ளன. மீதமுள்ள 144 திரைப்படங்களுக்கு OTT-யில் revenue share முறையில் கூட ஆதரவு இதுவரை கிடைக்கவில்லை. இதை நாம் அனைவரும் கவனத்தில் கொண்டு திரைப்பட தயாரிப்பில் இயங்கவேண்டும்.

**<u>சாட்டிலைட் நிறுவனங்களின் திரைப்படங்கள் வாங்கும் திட்டம்</u>**

சாட்டிலைட் உரிமைகளை விற்பதில் 2023 மிகப்பெரிய பிரச்சனைகளை சந்தித்துள்ளது. வெளியான 258 திரைப்படங்களில் 58 திரைப்படங்கள் மாத்திரமே Satellite உரிமைகள் வாங்கப்பட்டுள்ளன. மீதம் 200 திரைப்படங்கள் இதுவரை Satellite உரிமைகள் விற்கப்படவில்லை, பல முக்கிய, கோடிகளில் சம்பளங்கள் கேட்கும் நடிகர்களின் திரைப்படங்கள் உட்பட. அதற்கு முக்கிய காரணம் தமிழ் சினிமாவின் முதன்மை Satellite நிறுவனங்களான சன் டிவி, விஜய் டிவி, Zee டிவி போன்றவை மிகவும் குறைந்த அளவிளேயே திரைப்படங்களை வாங்குகின்றன. பெரிய பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படங்களை தவிர மீதம் படங்களில் வெகுசில படங்களை மட்டுமே இந்நிறுவனங்கள் Satellite உரிமம் வாங்கியுள்ளன.

எதாவது ஒரு OTT நிறுவனத்தில் revenue share முறையிலாவது நம் திரைப்படத்தை கொண்டு வந்துவிட முடியும். ஆனால், Satellite உரிமைகளை விற்பது, இன்றைக்கு மிகப்பெரிய சிக்கலாக மாறியுள்ளது. குறிப்பிட்ட சில படங்களை தவிர சிறு மற்றும் மீடியம் பட்ஜெட் படங்களை வாங்குவதற்கு Satellite நிறுவனங்கள் எந்த ஆர்வமும் காட்டுவதில்லை. ஒரு காலத்தில் Satellite உரிமைகள் விற்றுவிடும் என நம்பி திரைப்படங்கள் தயாரித்த காலம் போய், இன்று 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட திரைப்படங்கள் விற்கமுடியாமல் சிரமப்படுகின்றன. இதன் காரணமாக மிகப்பெரிய சிக்கலான பொருளாதார சூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை தயாரிப்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION ★ CHENNAI 600 006

**Overseas Rights/வெளிநாட்டு உரிமைகள்**

Overseas (வெளிநாட்டு) உரிமைகள் பொருத்தவரை டிஜிட்டல், ஓடிடி உரிமைகள் போலவே குறிப்பிட்ட சில படங்களுக்கு மட்டுமே வெளிநாட்டு உரிமைகளை விற்பதற்கு வாய்ப்பு உள்ளது. மீதமிருக்கும் சிறு மற்றும் மீடியம் பட்ஜெட் திரைப்படங்களை வாங்குவதற்கு, அத்திரைப்படத்திற்கு எதாவது ஒரு பரபரப்பு ஏற்பட்டிருந்தால் தவிர, வெளிநாட்டு உரிமைகளை வாங்கும் நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

**இசை உரிமைகள் (Audio/Music Rights)**

இசை உரிமைகள் பொருத்தவரை தற்போது நம்பிக்கையான சூழ்நிலை (Positive atmosphere) நிலவி வருகிறது. ஓரளவு பிரபலமான இசையமைப்பாளர் நமது படத்தில் பணியாற்றினால், பாடல்கள் நன்றாக இருக்கும் பட்சத்தில் நல்ல விலை கொடுத்து வாங்க ஆடியோ நிறுவனங்கள் தயாராக உள்ளன.

மொத்தமாக தமிழ் சினிமாவை பார்க்கும்போது, இசை உரிமைகள் (Audio/Music Rights) தவிர மீதமுள்ள அனைத்து உரிமைகளையும் (Theatrical, OTT, Satellite and Overseas) விற்பதற்கு, குறிப்பாக சிறு மற்றும் மீடியம் பட்ஜெட் படங்களுக்கு, ஒரு சவாலான சூழ்நிலை உள்ளது.

சில பெரிய பட்ஜெட் படங்களும் சாட்டிலைட் மற்றும் டிஜிட்டல்/OTT உரிமைகள் விற்பதில் பிரச்சனைகளை சந்திப்பதால் அவற்றின் வெளியீட்டை தள்ளி வைப்பதையும் நாம் பார்த்து வருகிறோம். எனவே வியாபாரம் செய்யும் பிரச்னை சிறு மற்றும் மீடியம் பட்ஜெட் படங்களுக்கு மட்டுமில்லை. அனைத்து படங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் உள்ளது என்பது தான் சமீபத்திய சூழ்நிலை.

அதே நேரம் இத்தகைய சூழ்நிலைகளை உடைத்து சிறு மற்றும் மீடியம் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட சில திரைப்படங்கள் தெலுங்கு மற்றும் மலையாளம் மொழிகளில் சமீபத்தில் பெருவெற்றி அடைந்துள்ளன. தெலுங்கில் சமீபத்தில் வெளியாகி ரூபாய் 200 கோடிக்கு மேல் வசூல் செய்த 'ஹனுமான்' திரைப்படம் ஒரு மீடியம் பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படமே. மலையாளத்தில் குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட 'RDX, Romancham, Falimy' போன்ற திரைப்படங்கள் பெரிய அளவில் திரையரங்குகளிலும், வணிக ரீதியிலும் வெற்றியடைந்துள்ளன. அத்தகைய ஒரு breakthrough தமிழ் சினிமாவில் ஏற்பட வேண்டும். அதற்கு அத்திரைப்படங்களை போலவே சிறந்த கதையம்சம் உள்ள திரைப்படங்கள் சிறு மற்றும் மீடியம் பட்ஜெட்டில் வெளிவர வேண்டும்.

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION ★ CHENNAI 600 006

மொத்தத்தில், 2024-ம் வருடம் ஒரு சவாலான வருடமாக தயாரிப்பாளர்களுக்கு இருக்க போகிறது, குறிப்பாக சிறு மற்றும் மீடியம் பட்ஜெட் படங்களை எடுப்பவர்களுக்கு. இந்த சவால்களை எதிர்கொள்ளும் ஒரே வழி சிறப்பான கதையம்சம் உள்ள திரைப்படங்களை கொண்டு வருவதுதான். அத்தகைய ஒரு சிறப்பான கதையம்சம் உள்ள படத்தோடு நாம் வரும்போது இந்த சவால்களை தவிடுபொடியாக்கி பல வெற்றிகளை அடைய முடியும். இதற்கு உதாரணமாக, 2023-ல் சிறு பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட *'Good Night'* என்ற திரைப்படம் அப்படத்தின் தயாரிப்பாளருக்கு வணிக வெற்றியை கொடுத்தது. அந்த வெற்றி அவரை தொடர்ந்து பயணிக்க வைத்து, அதே குழுவுடன் இணைந்து *'லவ்வர்'* (Lover) என்ற திரைப்படத்தை ஆறே மாதத்தில் வெற்றிகரமாக இந்த வாரம் கொண்டு வர முடிந்துள்ளது.

தமிழ்சினிமா தற்போது உள்ள நிலைகளை குறித்தும், 2024-ல் சந்திக்க இருக்கும் சூழ்நிலைகள் குறித்தும் ஒரு குறிப்பாக (Notes) இக்கடிதத்தை தாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளவும். இக்கடிதத்தின் நோக்கம் தங்களுக்கு நம்பிக்கையின்மையை எந்த விதத்திலும் ஏற்படுத்துவதற்கு அல்ல. சினிமா வியாபாரத்தில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் பற்றி ஒரு சரியான புரிதலுடன் நாம் அனைவரும் திரைப்பட தயாரிப்பில் இயங்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்போடு இக்கடிதம் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ் சினிமா வியாபாரம் மற்றும் விரிவாக்கம் குறித்து தங்களுக்கு ஏதாவது புது உத்திகள் இருந்தால், எங்களுக்கு தெரியப்படுத்தவும். தங்களுடன் கலந்தோலோசிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். **Please mail to:** tfapa2020@gmail.com.

தங்களின் இந்த திரைப்பட தயாரிப்பு பயணத்தில் தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கம் (TFAPA) தன்னால் முடிந்த அளவு அனைத்து வகைகளிலும் உறுதுணையாக இருக்கும். நன்றியுடன்,

தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில்,

| T.G. தியாகராஜன் | T. சிவா | G. தனஞ்ஜெயன் |
| --- | --- | --- |
| செயல் தலைவர் | பொது செயலாளர் | பொருளாளர் |

TAMIL FILM ACTIVE PRODUCERS ASSOCIATION
CHENNAI
600 006